13.02.2026 OS.No.20/2024 PW2 Name :.வள்ளியம்மாள்

குறுக்கு விசாரணை

1. 2006ல் எனக்கு திருமணம் நடந்தது. என் தாயார் மகேஸ்வரி 2004ல் இறந்துள்ளார். என்னுடைய திருமணத்தை என்னுடைய தகப்பனாரும் சித்தி கோவிந்தம்மாளும் முன்னின்று நடத்தி வைத்தார்கள். தற்போது நான் வீரன்னமலை கிராமத்தில் வசிக்கிறேன். என் தந்தையார் இறந்த பின் வழக்கு சொத்தில் தற்போது பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளார்கள். அவர்களுடன் அவர்களது தாயார் கோவிந்தம்மாளும் வசிக்கிறார்.
2. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்துகளை கோவிந்தம்மாளுக்கும் பிரதிவாதிகளுக்கும் ஒதுக்கியதால் தான் அவர்கள் சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் அது குறித்து எந்த விவரமும் கூறவில்லை. வழக்கு சொத்திற்கான பட்டா எதுவும் நான் வாங்கி தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தகப்பனார் சொத்தை கோவிந்தம்மாளுக்கு எழுதி கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரிந்துதான் வழக்கு போட்டுள்ளேன். அந்த ஆவணம் செல்லாது என வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை.
3. வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் நான் இருந்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் காவலுர் கிராமத்தில் இருந்த ஒரு ஏக்கர் சொத்தை எனக்கு கொடுத்துள்ளார் என்றும் அதை என் தாயார் விற்றுள்ளார் என்றும் சொன்னால் அவ்வாறு

இல்லை. நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

4. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 13/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.13 18:36:46 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.